بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

6 ரஜப் 1437 ஹிஜ்ரி கமரி 14 ஏப்ரல் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

சஹாபாக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) அவர்களின் காலத்திலிருந்து நமது இந்தக் காலக்கட்டம் வரையிலுள்ள எல்லா இஸ்லாமிய பிரிவுகளும் இவ்விஷயத்தில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். அதாவது, இஸ்லாத்தின் உண்மை இதுவேயாகும். எவ்வாறு ஒரு நபர் இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையாக யாருமில்லை என்றும் கருதுகின்றாரோ, அவனது இருப்பின் மீதும் ஏகத்துவத்தின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவ்வாறே அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது ஈமான் கொள்வதும் அவசியமானதாகும்.

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

குழப்பங்கள் நிறைந்துள்ள இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களைப் பின்பற்றுவது இரட்சிப்பைப் பெறுவதற்கு அவசியமானதன்று என்று கருதுகின்ற அத்தகைய மக்கள் கூட முஸ்லிம்களில் உருவாகி விட்டனர். அவர்கள் இறைவன் ஒருவன்; அவனுக்கு இணையில்லை என்று ஏற்றுக் கொள்வதே சுவர்க்கத்தில் நுழைவதற்கு போதுமானதாகும் என்று கருதுகின்றனர். இவர்களில் சிலர் இவ்வாறும் உள்ளனர். அவர்கள் முழுக்க முழுக்க இட்டுக்கட்டியும் அநீதியாகவும் அல்லது தங்களது தவறான புரிந்து கொள்ளுதலின் காரணமாகவும் என் மீது பல்வேறு வகையான பொருத்தமற்ற ஆட்சேபனைகளைச் செய்கின்றனர். இந்த ஆட்சேபனைகள் மூலம் சிலரது குறிக்கோள் மக்களை இந்த இயக்கத்தை விட்டும் விலக்குவதாகும் என்பது தெரிய வருகின்றது. சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். அதாவது மார்க்கத்திலுள்ள நுட்பமான விஷயங்களை அவர்களது இயல்புகளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களது இயல்பில் தீமை இல்லை. ஆனால் அதில் புரிந்து கொள்ளும் தன்மை இல்லை. அவ்வாறே அவர்கள் தாமாகவே உண்மை நிலையைப் புரிந்து கொள்ளும் வகையிலுள்ள விரிவான அறிவும் அவர்களுக்கு இல்லை. எனவே, இந்த முடிவுரையில் இந்த அனைத்து சந்தேகங் -களையும் அகற்றுவது பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதினேன்.

இந்த சந்தேகங்களை அகற்றுவதன் பக்கம் நான் கவனம் செலுத்த வேண்டிய எந்த தேவையும் இருக்கவில்லை. ஏனென்றால், எனது பல்வேறு நூல்களின் பல்வேறு இடங்களில் இந்த வீணான ஆட்சேபனை -களுக்கு பதில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்நாட்களில் அப்துல் ஹகீம் கான் என்ற பெயரில் ஒரு நபர் பட்டியாலா பிரதேசத்தில் துணை சர்ஜனாக இருந்து வருகின்றார். அவர் இதற்கு முன்னர் நம்மிடம் பைஅத் செய்திருந்தார். ஆனால், குறைவான சந்திப்பு மற்றும் குறைவாகவே எனது நட்பில் இருந்ததன் காரணமாக அவர் மார்க்க உண்மைகளை முற்றிலும் அறியாதவராகவும் அதிலிருந்து விலக்கப்பட்டவராகவும் ஆகி விட்டார். கர்வமும் அறியாமையும் ஒன்றிணைந்த நிலையில் தற்பெருமை மற்றும் தவறான எண்ணத்தின் நோயில் அவர் உள்ளார். தனது துர்பாக்கிய நிலையின் காரணமாக முர்தத் ஆகி இந்த இயக்கத்தின் பகைவராக ஆகி விட்டார். மேலும், அவரால் இயன்றவரை இறைவனின் ஒளியை இல்லாமல் ஆக்குவதற்காக தனது அறியாமை நிறைந்த எழுத்துக்களின் மூலமாக விஷத்தை ஊதுகின்ற பணியைச் செய்து வருகின்றார். அதன் மூலமாக இறைவனின் கைகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற அந்த தீபத்தை அவர் அணைத்து விட விரும்புகின்றார். எனவே, சுருக்கமாக அவரது சில ஆட்சேபனைகளுக்கு பதில் எழுதுவது பொருத்தமானதாகும். அது என்னவென்றால், மறுமையில் இரட்சிப்பைப் பெறுவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ள வேண்டிய தேவையில்லை. மாறாக, இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்றும் அறிந்துள்ள ஒவ்வொருவரும் (அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பொய்ப்படுத்துபவராக இருந்தாலும் கூட) அவர் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்பது அவரது கொள்கையாகும். இதன் மூலம் அவரது பார்வையில் ஒரு நபர் இஸ்லாத்தை கை விட்டு விட்டு முர்தத் ஆகி விட்டாலும் கூட அவர் இரட்சிப்பைப் பெற முடியும். அவர் மார்க்கத்தை கை விட்டு விட்டு சென்றதற்காக அவருக்கு தண்டனை வழங்குவது அநீதியான செயலாகும். உதாரணமாக, இப்போதுதான் அப்துல் கஃபூர் என்ற பெயரிலுள்ள ஒரு நபர் முர்தத் ஆகி ஆரிய சமாஜத்தில் இணைந்து விட்டார். தரம்பால் என்று பெயர் வைத்துள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்து -வதிலும் பொய்ப்படுத்துவதிலும் இரவு பகலாக அவர் ஈடுபட்டு வருகின்றார். அவரும் கூட அப்துல் ஹகீம் கானின் பார்வையில் நேரடியாக சுவர்க்கத்திற்கு சென்று விடுவார். ஆரிய மக்கள் சிலைகளை வணங்குவதிலிருந்து விலகியுள்ளனர். ஆனால், இத்தகைய கொள்கையின் அடிப்படையில் நபிமார்கள் அலைஹி முஸ்ஸலாம் அவர்களின் தோற்றம் முழுக்க முழுக்க வீணானதாகவும் தேவையற்ற -தாகவும் ஆகி விடும். ஏனென்றால், ஒரு நபர் நபிமார்களை பொய்ப்படுத்துபவராகவும் அவர்களுக்கு பகைவராகவும் இருந்து கொண்டு இறைவன் ஒருவன் என்று ஏற்றுகொள்வதன் மூலம் இரட்சிப்பை பெற முடியும் என்றால் இந்நிலையில் நபிமார்கள் உலகில்

*(தொடர்ச்சி 7-வது பக்கம்)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

தொன்றுதொட்டே ஷய்த்தான் மனிதனின் பகைவனாக இருக்கின்றான். ஷய்த்தானின் இந்த பகைமை அவன் முன்னால் வந்து சண்டை போடும் அளவில் பகிரங்கமான பகைமையாக இருக்கவில்லை. அவன் பல்வேறு தந்திரங்கள், சாக்குப் போக்குகள், ஏமாற்றுதல், சூழ்ச்சி, உலகப் பேராசை, மனிதனிடம் தான் என்ற அகந்தையை தூண்டுவது ஆகியவற்றின் மூலமாக அவன் மனிதனை நன்மைகளிலிருந்து வெகு தொலைவில் கொண்டு சென்று விடுகின்றான். தீமைகளுக்கு அருகில் கொண்டு சென்று விடுகின்றான். இறைவன் தனது நபிமார்களை அனுப்புகின்ற அந்த அமைப்பை நிறுவி மனிதர்களுக்கு நன்மையின் வழிகளைக் கூறினான். அவர்களின் சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளையும் கூறினான். அவர்கள் தமது இம்மையையும் மறுமையையும் சரி செய்து கொள்வதற்கான வழிகளையும் கூறினான்.

ஷய்த்தான் ஒரே நொடிப் பொழுதில் திடீரென்று தாக்குதல் நடத்துவதில்லை என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். அவன் மெதுமெதுவாகவே தாக்குதல் நடத்துகின்றான். ஒரு சிறிய தீமையை மனிதனின் உள்ளத்தில் போட்டு இந்த சிறிய தீமையால் என்ன வித்தியாசம் வந்து விடப்போகின்றது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றான். இது என்ன பெரிய பாவம்? என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றான். ஆனால், சிறு சிறு பாவங்கள் தான் பெரும் பாவங்களைத் தூண்டுவதற்கான வழியாக ஆகி விடுகின்றன. ஷய்த்தான் பொய், அநீதி, கொலை செய்யும் உணர்வு, வெளிவேஷம், கர்வம் ஆகியவற்றின் பக்கம் அழைக்கின்றான்.

பாவங்களை ஏற்றுக் கொண்டவாறு தவ்பா செய்தவாறு மனிதன் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பை வேண்டினால் அவன் மன்னிக்கப்படுகின்றான். அல்லாஹ்வும் பாவங்களை மன்னித்து விடுவான் என்ற இந்த நம்பிக்கையும் உருவாகி விடுகின்றது. ஆனால் ஷய்த்தான் கர்வம் கொண்டான். மேலும் அவன் சபிக்கப்பட்டான்.

கர்வத்தை சில நேரங்களில் மனிதன் உணர்வதில்லை. எனவே, மிகவும் நுட்பமாக இது தொடர்பாக நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

சில நேரங்களில் ஷய்த்தான் நன்மையான எண்ணங்களை உள்ளத்தில் இட்டும் கூட மக்களை தனக்குப் பின்னால் நடக்க வைக்கின்றான்.

வெளிப்படையாக பார்க்கும் போது பலரும் மிகவும் நல்லவர்களாக தெரிகின்றனர். இவர் மீது ஏன் துன்பங்கள் வந்தன? அல்லது ஏதாவதொரு நன்மையை பெறுவதிலிருந்தும் ஏன் இவர் விலகி இருக்கின்றார்? என மனிதன் வியப்படைகின்றான். ஆனால் உண்மையில் அவரது மறைவான பாவங்கள் இருந்தன. அவை தான் அவரது நிலையை இதுவரை கொண்டு வந்திருக்கின்றது.

ஒவ்வொரு நபரிடத்திலும் ஏதாவதொரு வகையில் தீமையின் தன்மை இருக்கின்றது. அதுவே அவனது ஷய்த்தான் ஆகும். அவனை கொலை செய்யாமல் பணி நடைபெற முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கட்டளைகளின் ஒளியில் ஷய்த்தான், அவனது தாக்குதல்கள், அவன் ஏற்படுத்தும் சலனங்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளின் பக்கம் செல்வதற்கு ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள வழிகாட்டல்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 11 மார்ச் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு அமான் மாதம் 11 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இந்த வசனங்களின் பொருள் நம்பிக்கை கொண்டவர்களே! ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பவரை வெட்கங்கெட்ட விஷயங்களையும் வெறுக்கத்தக்கவற்றையும் செய்யுமாறு அவன் ஏவுகின்றான். அல்லாஹ்வின் அருளும் அவனது கருணையும் இல்லாமல் இருந்திருப்பின் உங்களுள் எவரும் ஒருபோதும் தூய்மை அடைந்திருக்க மாட்டார். ஆனால் அல்லாஹ் தான் விரும்புபவரை தூய்மை ஆக்குகிறான். அல்லாஹ் மிக அதிகமாக கேட்பவனும் நிரந்தரமான அறிவை கொண்டவனும் ஆவான். (24:22)

தொன்றுதொட்டே ஷய்த்தான் மனிதனின் பகைவனாக இருக்கின்றான். அவ்வாறே எப்போதும் இருப்பான். இது அவனிடம் நிரந்தரமாக இருக்கின்ற ஏதோவோர் ஆற்றல் அவனிடம் இருக்கின்றது என்பதனால் அல்ல. மாறாக, மனிதன் பிறந்த போது அல்லாஹ் மனிதனுக்கு அவன் சுதந்திரமாக இருக்கின்ற உரிமையை வழங்கி இருந்தான். ஏனென்றால் அவனது அடியார்கள் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதை அல்லாஹ் அறிந்திருந்தான். ஷய்த்தானின் இந்த பகைமை அவன் முன்னால் வந்து சண்டையிடும் அளவில் பகிரங்கமான பகைமையாக இருக்கவில்லை. அவன் பல்வேறு தந்திரங்கள், சாக்குப் போக்குகள், ஏமாற்றுதல், சூழ்ச்சி, உலகப் பேராசை, மனிதனிடம் தான் என்ற அகந்தையை தூண்டுவது ஆகியவற்றின் மூலமாக அவன் மனிதனை நன்மைகளிலிருந்து வெகு தொலைவில் கொண்டு சென்று விடுகின்றான். தீமைகளுக்கு அருகில் கொண்டு சென்று விடுகின்றான். ஷய்த்தான் இறைவனிடம் நீ எந்த இயல்பில் மனிதனை படைத்துள்ளாயோ அதாவது மனித இயல்பானது இரு பக்கமும் திரும்பக் கூடியதாக இருக்கின்றது. எனவே அவனை நான் எனக்குப் பின்னால் வரச் செய்வேன். ஏனென்றால் தீமைகளின் பக்கம் அவனது கவனம் அதிகமாக இருக்கும் என்று கூறினான். மேலும் நீ எனக்கு அனுமதி வழங்கினால் நான் எல்லா வழிகளிலும் இவன் மீது தாக்குதல் நடத்துவேன். எல்லா வழிகளின் மூலமும் அவனை வழிகெடுப்பேன். உன்னுடைய உண்மையான அடியார்களைத் தவிர, தூய்மையான அடியார்களை தவிர மற்றவர்களை நான் வழிகெடுத்து விடுவேன். அந்த உனது அடியார்கள் எனது தாக்குதலிருந்து தப்பித்து விடுவர். அவர்கள் மீது எனது எந்த சூழ்ச்சியும், எந்த தாக்குதலும் எதையும் செய்ய முடியாது. இவர்களைத் தவிர பெரும்பாலார் எனது அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்வர் என்று ஷய்த்தான் இறைவனிடம் கூறினான்.

அல்லாஹ்வும் அவனுக்கு அனுமதி வழங்கினான். அத்துடன் எவர்கள் உனக்குப் பின்னால் வருபவர்களாக இருப்பார்களோ அவர்களை நான் நரகத்தில் இடுவேன் என்றும் இறைவன் கூறினான். ஆனால் அத்துடன் இறைவன் தனது நபிமார்களை அனுப்புகின்ற அந்த அமைப்பை நிறுவி மனிதர்களுக்கு நன்மையின் வழிகளை கூறினான். அவர்களின் சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளையும் கூறினான். அவர்கள் தமது இம்மையையும் மறுமையையும் சரி செய்து கொள்வதற்கான வழிகளையும் கூறினான். ஷய்த்தான் உங்களது பகிரங்கமான பகைவனாவான் என்பதை அவன் தெளிவுபடுத்தி விட்டான். அவன் அனுதாபம் காட்டுதல் என்ற போர்வையில் இருந்தவாறு உங்களுக்கு சிறப்பான நிலை மற்றும் பயனைத் தர மாட்டான். மாறாக அவன் உங்களை தீமை மற்றும் இழப்பின் பக்கம் அழைக்கின்றான். ஆனால் மனிதனின் செயல்கள் கணக்கெடுக்கப்படும் போது மிகவும் நிம்மதியுடனும் தைரியத்துடனும் நான் உங்களை தீமையின் பக்கம், பாவங்களின் பக்கம், பேராசையின் பக்கம், இறைவனது கட்டளைக்கு எதிராக செல்வதன் பக்கம் அழைத்தேன். ஆனால் நீங்களோ அறிவுள்ள மனிதர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் ஏன் உங்களுடைய அறிவை பயன்படுத்தவில்லை. இறைவனது நன்மையின் குரலுக்கு எதிரில் தீமையின் பக்கம் அழைக்கின்ற எனது குரலுக்கு நீங்கள் ஏன் முன்னுரிமை வழங்கினீர்கள்? எனவே இப்போது நீங்கள் செய்ததற்கான தண்டனையை சுவையுங்கள் என்று ஷய்த்தான் மனிதனிடம் கூறி விடுவான். இப்போது எனக்கு உங்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்றும் கூறி விடுவான். உங்களிடம் பகைமை காட்டுவதே எனது நோக்கமாக இருந்தது. அதை

நான் நிறைவேற்றி விட்டேன். இப்போது நீங்கள் நரக நெருப்பில் எரியுங்கள் என்றும் கூறுவான்.

ஆக, இவ்வாறே ஷய்த்தான் மனிதனிடம் பகைமையுடன் நடந்து கொள்கின்றான். திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களில் அல்லாஹ் ஷய்த்தானின் தாக்குதல்கள், தந்திரங்கள், சூழ்ச்சிகள் ஆகியவை தொடர்பாக நம்மை எச்சரித்துள்ளான். நான் ஓதிய இந்த வசனத்திலும் அல்லாஹ் இதையே கூறியுள்ளான். அதாவது ஷய்த்தான் எப்போதும் மனிதனுக்கு பின்னாலேயே வந்து கொண்டிருக்கின்றான். நான் இவனுக்கு வலப்புறமும், இடப்புறமும், முன்னாலும், பின்னாலும் தாக்குதல் நடத்துவேன் என்று அவன் இறைவனிடம் கூறியிருந்ததால் நிரந்தர மனப்பாங்குடன் அவன் இந்த தாக்குதல்களை தொடுத்துக் கொண்டிருந்தான். இப்போதும் தொடுத்துக் கொண்டிருக்கின்றான். எதுவரை என்றால் நான் நேரான வழியில் அமர்ந்தவாறு மனிதன் மீது தாக்குதல் நடத்துவேன் என்றும் ஷய்த்தான் இறைவனிடம் கூறினான்.

ஒரு நபர், தான் நேரான வழியில் செல்வதாக கருதுகின்றார். அதன் காரணமாக நான் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து விட்டேன் என்று அவர் கருதுகின்றார். ஆனால் இது அந்த நபரின் தவறான எண்ணமாகும். எவர்கள் மீது அல்லாஹ்வின் கோபம் இறங்கியதோ, எவர்கள் வழிகேட்டில் சென்று விட்டவர்களாக ஆனார்களோ அவர்களும் கூட முதலில் நேரான வழியில் செல்பவர்களாகவே இருந்தனர். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர். பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் ஏற்றுக் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர். ஆனால் அதற்குப் பிறகு வழிகேட்டிலும், இறைவனுக்கு இணை வைப்பதிலும் அவர்கள் மூழ்கி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுப்பவர்களாக அவர்கள் ஆகிவிட்டனர். எனவே அல்லாஹ் கூறுகின்றான். மனிதன் ஈமான் கொண்ட பிறகும் கூட ஷய்த்தான் அவனுக்கு பின்னால் வருவதை விட்டு விடுவதில்லை. மேலும் அவன் மனிதனை வழிகெடுக்கின்றான். பல மக்களும் ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாகி அவன் கூறும் விஷயங்களைக் கேட்டு வழிகேட்டில் சென்று விடுகின்றனர். எதுவரை என்றால் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்களும் கூட மூர்த்தத்துளாகவும், குழப்பவாதிகளாகவும் ஆகிவிடுகின்றனர். இது ஷய்த்தான் ஏற்படுத்துகின்ற மிகப்பெரும் ஆபத்தாகும். அல்லாஹ்வின் சிறப்பான அருள்தான் மனிதனை இந்த மிகப்பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும். அந்த அருள்தான் அவனை காப்பாற்றிக் கொண்டும் இருக்கின்றது. அல்லாஹ் இந்த வசனத்தின் இறுதியில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் சமீஃ ஆக அதாவது நன்கு கேட்பவனாக இருக்கின்றான் என்று கூறி அந்த சொற்கள் மூலம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவன் ஆறுதல் வழங்குகின்றான். அல்லாஹ் கேட்கக் கூடியவனாக இருக்கின்றான். எனவே அவனது கதவுகளை தட்டுங்கள் என்று அவன் கூறுகின்றான். அவனை அழையுங்கள். நிரந்தர மனப்பாங்குடன் அவனை அழையுங்கள். அவன் முன்னிலையில் நிரந்தரமாக துஆக்கள் செய்தவாறு குனிந்து விடுங்கள். பிறகு அந்த இறைவன் அலீம் ஆகவும் இருக்கின்றான். அடியார்களின் நிலைமைகளை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். எனது அடியான் தூய உள்ளத்துடன் என்னை அழைக்கின்றான் என்பதை அவன் பார்க்கும் போது பிறகு இறைவன் அந்த நம்பிக்கை கொண்டவரின் உள்ளத்தில் எத்தகைய ஈமானின் ஆற்றலை ஏற்படுத்தி விடுகின்றான் என்றால் அதன் மூலம் அவர் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றார். அதன் மூலம் நன்மைகளின் தரத்தை மேலும் மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்து விடுகின்றது. தீமைகளிலிருந்து விலகி இருப்பதற்கான ஆற்றல் அவரிடம் உருவாகி விடுகின்றது.

உனது தூய அடியார்களைத் தவிர மற்ற அனைவரும் எனக்குப் பின்னால் வருவார்கள் என்று ஷய்த்தான் இறைவனிடம் கூறிய போது ஓர் அறிவுள்ள மனிதனுக்கு அதைப் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும். ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவருக்கு அதைப் பற்றி சிந்திப்பது அவசியமாகும். அதாவது நாம் அல்லாஹ்வின் கலப்பற்ற தூய அடியாராக எவ்வாறு ஆக முடியும்? என்பதை சிந்திக்க வேண்டும். கலப்பற்ற தூய அடியாராக ஆவதற்கு அல்லாஹ் இந்த வசனத்தில் ஒரு வழியை கூறியுள்ளான். வீணானதாகவும், பயனற்றதாகவும் இருக்கின்ற ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் விலகியிருக்க வேண்டும். அவை இறைவனது வெறுப்பிற்குரியவையாகும். வெட்கக்கேடான செயல்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் விலகி இருக்கும் போது அல்லாஹ்வின் கருணை அவரை தூய்மைப்படுத்தும். எவரை அல்லாஹ் தூய்மைப்படுத்து –கின்றானோ அவர் தூய்மையாகி விடுகின்றார். அத்தகைய தூயவர்களுக்கு அருகில் அதற்குப் பிறகு ஷய்த்தான் வர மாட்டான். ஷய்த்தான் ஒரே நெடிப் பொழுதில் திடீரென்று தாக்குதல் நடத்துவதில்லை என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். அவன் மெதுமெதுவாகவே தாக்குதல் நடத்துகின்றான். ஒரு சிறிய தீமையை மனிதனின் உள்ளத்தில் இட்டு இந்த சிறிய தீமையால் என்ன வித்தியாசம் வந்து விடப்போகின்றது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றான். இது என்ன பெரிய பாவம்? என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றான். ஆனால் சிறு சிறு பாவங்கள்தான் பெரும் பாவங்களை தூண்டுவதற்கான வழியாக ஆகி விடுகின்றன.

கொள்ளையடித்தல் மற்றும் கொலை செய்தல் மட்டும்தான் பெரிய பாவங்களாக இருக்கின்றன என்பது கண்டிப்பானதல்ல. எந்தவொரு தீமை சமுதாயத்தின் நிம்மதியையும், அமைதியையும் சீர்குலைக்கக் கூடியதாக இருந்தாலும் அது பெரும் தீமையாக ஆகி விடுகின்றது. மனிதன் என்ன செய்கின்றான் என்ற உணர்வே அவனுக்கு இல்லாமல் ஆகி விடுகின்றது. எனவே அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் தூய்மையடைய வேண்டுமென்றால் நீங்கள் இறைவனின் விருப்பத்தை பெற வேண்டுமென்றால் பிறகு எங்கு நீங்கள் நிரந்தர மனப்பாங்குடன் தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சிகள் செய்தவாறு ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்வதிலிருந்தும் தப்பித்து விடுவீர்களோ அங்கு நிரந்தர மனப்பாங்குடன் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வந்தவாறு நீங்கள் தூய்மையடைவதற்கு முயற்சி செய்வதும் அவசியமானதாகும். மேலும் நிரந்தரமாக ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வை அழைத்தவாறு அவனிடம் உதவி கேட்பதும் அவசியமானதாகும். அது அல்லாமல் மனிதன் ஷய்த்தானின் தாக்குதலில் இருந்து தப்ப முடியாது.

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். சில மக்களது உள்ளங்களில் அல்லாஹ் ஷய்த்தானை ஏன் படைத்துள்ளான்? முதல் நாளிலேயே அவன் அவமரியாதையாக நடந்து கொண்டதற்கு தண்டனை வழங்கியவாறு அல்லாஹ் ஏன் அவனை அழிக்கவில்லை? போன்ற கேள்விகள் எழுகின்றன. முதல் நாளிலேயே ஷய்த்தானை அழித்திருந்தால் உலகில் குழப்பமே ஏற்பட்டிருக்காதே என்று அவர்கள் கேட்கின்றனர். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள். அந்த மேற்கோளை நான் உங்கள் முன்னால் எடுத்துக் கூறுகின்றேன். அல்லாஹ் ஷய்த்தானை ஏன் படைத்தான்? அவனுக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை? என்ற கேள்விக்கு பதில் கூறும் வகையில் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்.

இதற்குப் பதில் இதுவாகும். ஒவ்வொரு மனிதனுக்காகவும் அவனை ஈர்க்கின்ற இரண்டு விஷயங்கள் உள்ளன என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஒன்று நன்மையின் ஈர்ப்பாகும். அது மனிதனை நன்மையின் பக்கம் ஈர்க்கின்றது. மற்றொன்று தீமையின் ஈர்ப்பாகும். அது மனிதனை தீமையின் பக்கம் ஈர்க்கின்றது. சில நேரங்களில் மனிதனது உள்ளத்தில் தீமையின் எண்ணங்கள் தோன்றுகின்றன. அப்போது அவன் எந்த அளவு தீமையின் பக்கம் குனிந்து விடுகின்றான் என்றால் அது யாரோ ஒருவர் அவனை தீமையின் பக்கம் இழுத்துச் செல்வது போன்று இருக்கும் என்பதை அனுபவத்தால் நாம் பார்க்கின்றோம். அவ்வாறே சில நேரங்களில் நல்ல எண்ணங்கள் அவனது உள்ளத்தில் வருகின்றன. அப்போது அவன் எந்த அளவு நன்மையின் பக்கம் குனிகின்றான் என்றால் யாரோ ஒருவர் நன்மையின் பக்கம் அவனை இழுத்துச் செல்வது போன்று அது இருக்கும். சில நேரங்களில் ஒரு நபர் தீமை செய்து பிறகு நன்மையின் பக்கம் திரும்புகின்றார். நான் தீய செயலை செய்து விட்டேன் என்பதற்காக அவர் வெட்கப்படுகின்றார். சில நேரம் இவ்வாறும் நிகழ்கின்றது. ஒருவர் இன்னொருவரை ஏசுகின்றார். அடிக்கின்றார். அதற்குப் பிறகு வெட்கப்படுகின்றார். உள்ளத்தால் பொருத்தமற்ற இந்த செயலை நான் செய்து விட்டேன் என்று கூறுகின்றார். அந்த மனிதனிடம் ஏதாவதொரு வகையில் அவர் நல்ல முறையில் நடந்து கொள்கின்றார். அவரிடம் மன்னிப்பு கேட்கின்றார். நன்மையைப் பற்றிய உணர்வு அவரிடம் ஏற்படுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள். இந்த இரு விதமான ஆற்றல்களும் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்றது. மனிதனின் இயல்பையே அல்லாஹ் அவ்வாறு தான் உருவாக்கியுள்ளான். இஸ்லாமிய ஷரீ அத் நன்மையின் ஆற்றலுக்கு மலக்குகளின் தூண்டுதல் என்று பெயர் வைத்துள்ளது. தீமையின் ஆற்றலுக்கு ஷய்த்தானின் தீண்டுதல் என்று பெயர் வைத்துள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள். தத்துவ வாதிகள் இந்த இரு ஆற்றல்களும் ஒவ்வொரு மனிதனிடமும் கண்டிப்பாக இருக்கின்றன என்ற அளவில் மட்டுமே அதை ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது நன்மையின் ஆற்றல் மற்றும் தீமையின் ஆற்றல் ஆகிய இரண்டும் ஒவ்வொரு மனிதனிடமும் கண்டிப்பாக இருக்கின்றன. ஆனால் மறைவிலும் மறைவாக இருக்கக்கூடிய இரகசியங்களை இறைவன் வெளிப்படுத்துகின்றான். மிக தொலைவிலுள்ள மிகவும் மறைவாக உள்ள இரகசியங்கள் பற்றியும் கூறுகின்றான். ஆழமான, மறைவான விஷயங்களைப் பற்றி அவன் தெரிவிக்கின்றான். அவன் இந்த இரு ஆற்றல்களையும் படைக்கப்பட்டவையாக கூறுகின்றான். எவன் நன்மையை உள்ளத்தில் இடுகின்றானோ அவனுக்கு மலக்கு என்றும் ரூஹுல் குதுஸ் (பரிசுத்த ஆவி) என்றும் பெயர் வைக்கின்றான். எவன் தீய விஷயங்களை உள்ளத்தில் இடுகின்றானோ அவனுக்கு ஷய்த்தான் என்றும் இப்லீஸ் என்றும் பெயர் வைத்துள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் தொன்றுதொட்டு இருந்து வரும் அறிஞர்களும், தத்துவவாதிகளும்

ஒருவரிடம் இத்தகைய விஷயங்கள் இடப்படுவது என்பது வீணான விஷயமல்ல என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இது வீணான விஷயமல்ல. இதுவொரு சரியான விஷயமாகும். அதாவது மனிதனது உள்ளத்தில் தீமைக்கான ஆற்றலும் உருவாகின்றது. அல்லது தூண்டுதல் ஏற்படுகின்றது. மேலும் நன்மைக்கான தூண்டுதலும் உருவாகின்றது.

மீண்டும் இதனை விளக்கியவாறு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கின்ற இந்த இரு ஆற்றல்களையும் நீங்கள் ஆற்றல்கள் என்று கூறினாலும் சரி. அல்லது அவற்றிற்கு ரூஹுல் குதுஸ் (பரிசுத்த ஆவி) மற்றும் ஷய்த்தான் என்று பெயர் வைத்தாலும் சரி. எந்நிலையிலும் இந்த இரு ஆற்றல்கள் இருப்பதை நீங்கள் மறுக்க முடியாது. அவற்றை இறைவன் படைத்ததன் நோக்கம் இதுவாகும். அதாவது மனிதன் தனது நற்செயல்கள் மூலம் நற்கூலி பெற தகுதியுடையவனாக ஆக வேண்டும். ஏனென்றால், மனிதனின் இயல்பு எந்நிலையிலும் நல்ல செயல்களை செய்யும் நிர்பந்தத்திற்கு ஆளாகின்றது. தீய செயல்களை செய்வதை இயல்பாகவே அது வெறுக்கின்றது. மனிதனின் இயல்பு இவ்வாறு இருக்கும் போது இத்தகைய நிலைமையில் நல்ல பணிக்கு ஒரு அணு அளவு கூட அவனுக்கு நற்கூலி கிடைக்காமல் போய் விடுமா? ஏனென்றால், அது அவனது இயல்பிலுள்ள சிறப்பம்சமாக இருக்கின்றது. ஆனால் இந்நிலையில் அவனது இயல்பு இரண்டு ஈர்ப்புகளுக்கு இடையில் இருக்கின்றது. அவன் நன்மையின் ஈர்ப்பிற்கு கட்டுப்பட்டு நடக்கின்றான். அவனுக்கு அந்த செயலுக்கான நற்கூலி கிடைத்து விடுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள். மனிதனுடைய உள்ளத்தில் இரு வகையான விஷயங்கள் இடப்படுகின்றன. நன்மையான விஷயங்கள் இடப்படுகின்றன. தீமையான விஷயங்களும் இடப்படுகின்றன. இவ்வாறு இரண்டு வகையான விஷயங்கள் இடப்படுவது மனிதனின் பிறப்பிலுள்ள பகுதியாக இருக்க முடியாது. அதாவது மனிதன் பிறந்த போது இவை அவனது பங்கில் இருக்கவில்லை. ஏனென்றால் இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று முரணானவையாகும். நன்மையும், தீமையும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும் போது குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகளின் இயல்பில் நன்மை, தீமை ஆகிய இரண்டும் இருந்திருக்க முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள். இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று முரணான விஷயங்களாகும். மேலும் இவற்றை செய்வதில் மனிதனுக்கு எந்த சக்தியும் இல்லை. இந்த இரண்டு விஷயங்கள் இடப்படுவதும் வெளியில் இருந்துதான் வருகின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. நன்மையின் தாக்கத்தையும், தீமையின் தாக்கத்தையும் வெளியிலிருந்துதான் மனிதன் பெறுகின்றான். பிறகு படிப்படியாக நன்மையில் முன்னேறுகின்றான். அல்லது தீமையில் முன்னேறுகின்றான். எவ்வாறிருப்பினும், இந்த தாக்கத்தை மனிதன் வெளியில் இருந்துதான் பெறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள். மனிதன் முழுமையடைவது இந்த விஷயங்களில் அடங்கி இருக்கின்றது. வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த இரு வகையான இருப்புகளையும் அதாவது மலக்கையும், ஷய்த்தானையும் இந்துக்களின் வேதங்களும் ஏற்றுக் கொள்கின்றன. நெருப்பை வணங்குகின்றவர்களும் இவற்றை ஏற்றுக் கொள்கின்றனர். இறைவன் புறமிருந்து எத்தனை வேதங்கள் உலகில் வந்துள்ளனவோ அந்த அனைத்திலும் இந்த இரு இருப்புகளும் இருக்கின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே இவை தொடர்பாக ஆட்சேபனை செய்வது முழுக்க முழுக்க அறியாமையும், காழ்ப்புணர்ச்சியும் ஆகும். இதற்குப் பதில் கூறும் முகமாக இந்த அளவு எழுதுவதும் அவசியமானதாகும். எந்த நபர் தீமையிலிருந்தும், தீங்கு விளைவிப்பதிலிருந்தும் விலகாமல் இருக்கின்றாரோ அவர் சுயமே ஷய்த்தானாகி விடுகின்றார். இதைப் பற்றி ஒரிடத்தில் மனிதனும் ஷய்த்தானாக ஆகி விடுகின்றான் என்று இறைவன் கூறுகின்றான்.

இப்போது இறைவன் அந்த ஷய்த்தானுக்கு ஏன் தண்டனை வழங்கவில்லை? என்ற கேள்வி எழுகின்றது. அதற்கு பதில் இதுவாகும். அதாவது ஷய்த்தானிற்கு தண்டனை வழங்குவதற்கு திருக்குர்ஆனில் அவனுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்ட ஒரு நாள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வாக்குறுதி கொடுக்கப்பட்ட நாளுக்காக காத்திருக்க வேண்டும். அல்லாஹ் நான் தண்டனை வழங்குவேன். கண்டிப்பாக வழங்குவேன். இவ்வுலகிலோ அல்லது மறு உலகிலோ அதற்கென்று நிர்ணயிக்கப்பட்ட அந்த நாளில் ஷய்த்தானுக்கு தண்டனை கிடைக்கும் என்று அல்லாஹ் கூறுகின்றான். பல ஷய்த்தான்களும் இறைவனின் கையால் தண்டனையை பெற்று விட்டனர். இன்னும் பல ஷய்த்தான்கள் அந்த தண்டனையை பெற வேண்டியதிருக்கின்றது. (சஷ்மயே ம.ஃ.ரி.ஃ.பத். ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 293-294)

எந்தெந்த விஷயங்களின் பக்கம் ஷய்த்தான் அழைக்கின்றான்? எத்தகைய மனிதர்கள் ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்கின்றனர்? எந்தெந்த விஷயங்களைப் பெற்று மனிதன் ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்வதிலிருந்தும் தப்பித்து விடுகின்றான்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஷய்த்தான் பொய், அநீதி, கொலை செய்யும் உணர்வு, வெளிவேஷம், கர்வம் ஆகியவற்றின் பக்கம் அழைக்கின்றான். நீங்கள் இந்த தீமையின் பக்கம் வாருங்கள் என்று அவன் மிகுந்த அன்புடன் அழைக்கின்றான். இதற்கு எதிரில் பொறுமை, இறை அன்பில் திளைத்திருத்தல், அல்லாஹ்வுக்காக தன்னை மாய்த்துக் கொள்ளுதல், கலப்பற்ற மனத்தூய்மை, வெற்றி ஆகிய நல்லொழுக்கங்கள் இருக்கின்றன. இவற்றின் பக்கம் அல்லாஹ் அழைக்கின்றான். ஒருபுறம் ஷய்த்தான் அழைக்கின்றான். மறுபுறம் அல்லாஹ் இந்த நன்மையின் பக்கம் அழைக்கின்றான். மனிதன் இந்த இரண்டு ஈர்ப்புகளுக்கும் ஆளாகின்றான். இரு வகையான ஈர்ப்புகளும் அவனை இழுக்கக்கூடியவையாக இருக்கின்றன. இந்த இரண்டு ஈர்ப்புகளுக்கும் அவன் ஆளாகின்றான். பிறகு யாருடைய இயல்பு நல்லதாக இருக்கின்றதோ, எவரிடம் நற்பாக்கியத்தின் தன்மை வைக்கப்பட்டிருக்கின்றதோ அவர் ஷய்த்தானின் இந்த ஆயிரக்கணக்கான அழைப்புகள் மற்றும் அவன் ஏற்படுத்துகின்ற இந்த உணர்வுகள் இருந்தும் கூட அவரிடம் இருக்கின்ற அந்த நேர்மையான இயல்பு, நற்பாக்கியம், சாந்தியின் தன்மை ஆகியவற்றின் அருளால் அவர் அல்லாஹ்வின் பக்கள் ஓடுகின்றார். அதாவது அவரை எப்படி அழைத்தாலும் சரி. எவரிடத்தில் அல்லாஹ் நற்பாக்கியத்திற்கான தன்மையை வைத்திருக்கின்றானோ அவர் தனது நற்பாக்கியம் எனும் இயல்பின் காரணமாகவும் அதன் அருளாலும் அல்லாஹ்வின் பக்கம் குனிகின்றார். அவ்வாறு குனியும் போது அத்தகைய இயல்பை உடையவர்களுக்கு அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் ஓடுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குகின்றான். ஷய்த்தானின் பக்கம் ஓடுவதற்கு பதிலாக இறைவனிடத்திலேயே அவர் சுகத்தையும், ஆறுதலையும், நிம்மதியையும் பெறுகின்றார்.

பிறகு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள். ஒவ்வொரு பொருளுக்கென்றும் அடையாளங்கள் கண்டிப்பாக இருக்கின்றன. அவற்றில் அந்த அடையாளங்கள் காணப்படாத வரை அவை நம்பத்தகுந்தவையாக இருக்க முடியாது. பாருங்கள். மருந்துகளை மருத்துவர் அடையாளங்கண்டு கொள்கின்றார். எந்த பழங்கள் அல்லது மூலிகைகள் மூலம் மருந்துகள் ஆயத்தம் செய்யப்படுகின்றனவோ அந்த பழங்கள் மற்றும் மூலிகைகளிலுள்ள பண்புகள் அவற்றில் இல்லாமல் இருந்தால் அவற்றால் எந்த பயனும் ஏற்படாது. ஆனால் ஒரு நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இந்த பண்புகள் அவற்றில் இருப்பது தெரிய வந்தால் பிறகு அவற்றின் மூலமாக சில நோய்களிலிருந்து குணம் கிடைத்து விடுகின்றது. அவற்றில் இந்த பண்புகள் அல்லது இந்த சிறப்பம்சங்கள் இல்லை என்பது மருத்துவருக்கு தெரிய வந்தால் அவர் அவற்றை ஒன்றுமற்றதாக கருதி தூக்கி எறிந்து விடுகின்றார். இவ்வாறே ஈமானின் அடையாளங்களும் உள்ளன. அல்லாஹ் மீண்டும் மீண்டும் தனது வேதத்தில் அதைப் பற்றி குறிப்பிட்டுள்ளான். இதுவே உண்மையான விஷயமாகும். அதாவது எப்போது ஈமான் மனிதனது உள்ளத்தில் நுழைகின்றதோ அப்போது அத்துடன் அல்லாஹ்வின் மகிமை அதாவது அவனது கம்பீரம், அவனது புனிதத் தன்மை, பெருமை, வல்லமை மற்றும் எல்லாவற்றையும் விட அதிகமாக லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதன் உண்மையான கருத்து அவனது உள்ளத்தில் நுழைந்து விடுகின்றது. எதுவரை என்றால் அல்லாஹ் அவனுக்குள் நுழைந்து விடுகின்றான். ஷய்த்தானிய வாழ்வின் மீது ஒரு மரணம் ஏற்பட்டு விடுகின்றது. பாவத்தின் இயல்பு மரணித்து விடுகின்றது. இதுவே இயல்பின் அந்த நற்பாக்கியம் ஆகும். அதாவது சரியான ஈமான் இருந்தால் பிறகு பாவத்தின் இயல்பு மரணித்து விடுகின்றது. அந்த சமயத்தில் ஒரு புது வாழ்க்கை ஆரம்பமாகி விடுகின்றது. அது ஆன்மீக வாழ்க்கையாக இருக்கின்றது. அல்லது அது வானத்தின் பிறப்பின் முதல் நாளாகும் என்று நீங்கள் அதை கூறலாம். ஷய்த்தானிய வாழ்வின் மீது மரணம் ஏற்படுகின்ற போது ஆன்மீக வாழ்க்கையின் பிறப்பு நிகழ்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 169, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதுவே மனிதன் பிறகு இறைவனுக்காக ஆகி விடுகின்ற அந்த நேரமாக இருக்கின்றது.

பிறகு கர்வம் மற்றும் ஷய்த்தானுக்கு இடையிலுள்ள தொடர்பை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அதாவது எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஆதமும் பாவமும் செய்திருந்தார். ஆதம் செய்த பாவம் தொடர்பான குறிப்பு மதங்களின் வரலாற்றில் நமக்கு கிடைக்கின்றது. அவ்வாறே ஷய்த்தானும் பாவம் செய்துள்ளான். ஆக, பாவம் இரு வகையில் இருந்தன. ஒன்று ஆதம் செய்தது. மற்றொன்று ஷய்த்தான் செய்தது. ஆனால் ஆதமிடம் கர்வம் இருக்கவில்லை. எனவேதான் இறைவனிடம் அவர் தனது பாவங்களை ஏற்றுக் கொண்டார். அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இதன் மூலம் மனிதன் தவ்பா செய்தவாறு அதன் மூலம் அவனது பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கை வைக்கலாம். கர்வம் இல்லாமல் பாவங்களை ஏற்றுக் கொண்டவாறு, தவ்பா செய்தவாறு மனிதன் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பை வேண்டினால் அவன் மன்னிக்கப்படுகின்றான். அல்லாஹ்வும் பாவங்களை மன்னித்து விடுவான் என்ற இந்த நம்பிக்கையும் உருவாகி விடுகின்றது. ஆனால் ஷய்த்தான் கர்வம் கொண்டான். மேலும் அவன்

சபிக்கப்பட்டான். எந்த விஷயங்களை செய்வதற்கு மனிதனிடம் ஆற்றல் இல்லையோ அவை தொடர்பாக கர்வம் கொள்கின்ற மனிதன் தேவையில்லாமல் தனக்கு அந்த பொருள் கிடைக்க வேண்டுமென்று வாதம் செய்ய ஆயத்தமாகி விடுகின்றான். நீங்கள் கர்வம் கொள்ளும் அளவில் உங்களிடம் அந்த அளவு ஆற்றலும் இல்லை. எதுவரை உங்களால் செல்ல முடியும்? இன்னும் எவ்வளவு மேலே செல்ல முடியும்? இவற்றையெல்லாம் பெறுவதற்கான ஆற்றலே இல்லாத போது எவ்வாறு அவரால் தற்பெருமை கொள்ள முடியும்?

அன்னார் கூறுகின்றார்கள்: கர்வம் கொள்கின்ற மனிதன் தேவையில்லாமல் தன்னிடம் இந்த பொருள்கள் உள்ளன. அவை தனக்காக உள்ளன என வாதம் செய்ய ஆயத்தமாகி விடுகின்றார். ஆனால் அவை அவனுக்கு அருகில் கூட இருப்பதில்லை. நபிமார்களிடம் சில திறமைகள் இருக்கின்றன. அவற்றில் ஒரு திறமைதான் என்ற அகந்தை அவர்களிடமிருந்து பறிக்கப்படுவதாகும். அவர்கள் தம்மிடம் இருக்கின்ற 'தான்' என்ற அகந்தையை அழித்து விடுகின்றனர். அவர்களிடம் இந்த அகந்தை இருப்பதே இல்லை. அவர்கள் தங்கள் நஃப்ஸின் மீது ஒரு மரணத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பெருமை இறைவனுக்கே உரியதாகும். எந்த மக்கள் கர்வம் கொள்ளாமல் தாழ்மையுடன் பணியாற்றுகின்றனரோ அவர்கள் வீணாக்கப்படுவதில்லை. (மல்.்பூஸாத் தொகுதி 9, பக்கம் 281, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே கர்வத்திலிருந்து தவிர்ந்திருங்கள். இந்த சிறப்பம்சங்களை ஒரு நம்பிக்கை கொண்டவர் கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு கடைபிடிக்காமல் இருந்தால் அவர் ஷய்த்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்பவராக ஆகிவிடுவார். கர்வத்தை சில நேரங்களில் மனிதன் உணர்வதில்லை. எனவே மிகவும் நுட்பமாக இது தொடர்பாக நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஷய்த்தான் எவ்வாறெல்லாம் மனிதனை தனது பிடியின் கீழ் கொண்டு வருவதற்கு தந்திரமாக செயல்படுகின்றான்? இதைப் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பாவமான எந்தவொரு செயலையும் மனிதன் செய்யாமல் இருக்க வேண்டும். அதாவது மனிதனது செயலால் பாவம் அகன்று விட்டால் அதாவது, அப்பாவங்கள் மனிதனின் கண், காது, மூக்கு ஆகிய உறுப்புகள் வரை அவற்றில் பாவம் எஞ்சியிருக்க வேண்டும் என ஷய்த்தான் விரும்புகின்றான். வெளிப்படையாகப் பார்க்கும் போது எந்தவொரு செயலிலும் பாவம் இல்லாமல் இருந்தாலும் கூட ஷய்த்தான் மனிதனின் கண், காது மற்றும் மூக்கில் அமர்ந்திருக்க வேண்டும் என்றே விரும்புகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: அதிலும் அவனுக்கு எந்தவொரு பிடியும் கிடைக்காமல் போனால் ஷய்த்தான் அதற்காக எந்த அளவிற்கு முயற்சி செய்கின்றான் என்றால் வேறு எங்கும் இல்லை என்றாலும் குறைந்தபட்சம் அந்த பாவங்கள் அவனது உள்ளத்திலாவது இருக்க வேண்டும் என்று ஷய்த்தான் விரும்புகின்றான். சிலர் வெளிப்படையாக எந்த பாவமும் செய்வதில்லை. பெரும் பாவங்களை செய்வதில்லை. அல்லது சிறிய பாவங்களை கூட செய்வதில்லை. சிலரது நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றதென்றால் அவர்களுக்கு பாவங்கள் செய்வதற்கான சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. பாவம் செய்வதற்கான எந்தவொரு காரணமும் ஏற்படுவதில்லை. அல்லது ஏதாவதோர் அச்சத்தின் காரணமாக அவர்கள் பாவங்கள் செய்யாமல் இருக்கின்றனர். வெளிப்படையாக செயலளவில் எதுவுமே பாவமாக இருப்பதில்லை. ஆனால் ஷய்த்தானின் இந்த ஆசை பிறகும் கூட இருக்கின்றது. அல்லாஹ்விடம் தொடர்பு இல்லாமல் இருந்தால் ஏதாவதொரு வழியின் மூலமாக அவன் அவனுக்குள் பாவத்திற்கான விதையை வைக்க வேண்டும் என்றே விரும்புகின்றான். அது அவனது உள்ளத்தில் பதிந்து விட வேண்டும் என்றும் விரும்புகின்றான்.

அன்னார் கூறினார்கள்: ஷய்த்தான் தனது சண்டையை அதன் முடிவு வரை கொண்டு செல்கின்றான். ஆனால், எந்த உள்ளத்தில் இறைவன் மீதுள்ள அச்சம் இருக்குமோ அங்கு ஷய்த்தானின் அரசாங்கம் நடக்க முடியாது. அல்லாஹ்வின் அச்சம் இருந்தால் உள்ளத்தில் பாவத்திற்கான விதையை வைப்பது பற்றிய கேள்வியே உருவாகாது.

அன்னார் கூறினார்கள்: இறுதியில் ஷய்த்தான் அவனிடம் அவநம்பிக்கை அடைந்து விட்டான். அவரை விட்டு விட்டு தனியாக சென்று விட்டான். தன்னை பெரியவனாக காட்டுவதில் தோல்வி அடைந்து தனது படுக்கைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டான். (மல்.்பூஸாத் தொகுதி 3, பக்கம் 401-402, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆக, இறைவன் மீதுள்ள அச்சம் உள்ளத்தில் இருக்க வேண்டும் என்பதே அசல் விஷயமாகும். இறைவனைப் பற்றிய அச்சம் இருந்தால் பிறகு பல தீமைகளிலிருந்தும் மனிதன் தப்பித்து விடுகின்றான். ஒரு திருடனும் திருடுகின்றான். அவன் திருடுவதை ஒரு குழந்தை பார்க்கிறது என்பது அவனுக்கு தெரிந்து விட்டால் அவனுக்கு அந்த குழந்தை பற்றிய அச்சமும் இருக்கும். எனவே எதுவரை இந்த அச்சம் நமது உள்ளத்தில் இருக்காதோ அதுவரை நம்மால் எந்த செயலையும் செய்ய முடியாது. நாம் எந்த செயலை செய்தாலும் எல்லா நேரங்களிலும் இறைவன் நமது ஒவ்வொரு செயலையும் பார்க்கின்றான் என்பதை மூளையில் பதிய வைத்திருக்க வேண்டும். அந்த நேரம் வரை மனிதன் பாவங்களிலிருந்து தப்பிக்க முடியாது. சில நேரங்களில் ஷய்த்தான் நன்மையான எண்ணங்களை உள்ளத்தில் இட்டும் கூட மக்களை தனக்குப் பின்னால் நடக்க வைக்கின்றான்.

ஒரு முறை ஒரு சபையில் இல்ஹாம்கள் மற்றும் இல்கா (மனதிலிருந்து எழும் விஷயம்) ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வித்தியாசம் தொடர்பாக பேசப்பட்டது. இல்ஹாம்கள் தொடர்பாக அதில் பல கஷ்டமான விஷயங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய பேச்சும் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். சில மக்கள் அவர்களது மனம் கூறும் விஷயங்களை மற்றும் ஷய்த்தான் இடும் விஷயங்களை இறைவனது இல்ஹாமின் மூலம் அவற்றிற்கு இடையிலுள்ள வித்தியாசத்தை பிரித்தறிந்து கொள்வதில்லை. நஃப்ஸ் கூறுகின்ற விஷயங்கள் பேசப்படுகின்றன. ஷய்த்தான் சில விஷயங்களை உள்ளத்தில் இடுகின்றான். அவற்றை அவர்கள் இறைவனின் இல்ஹாமாக கருதி ஏமாற்றமடைகின்றனர். இறைவனிடமிருந்து என்ன விஷயம் வருகின்றதோ அது எழுச்சிமிக்கதாகவும், இன்பமானதாகவும் இருக்கின்றது. உள்ளத்தை தட்டக் கூடியதாக இருக்கின்றது. அது இறைவனின் விரல்களிலிருந்து வெளிப்படுகின்றது. அதன் எடைக்கு சமமானது வேறு எதுவுமே இல்லை. அது நீரூற்று போன்று விழக்கூடியதாக இருக்கின்றது. இதைப் பற்றியே திருக்குர்ஆனில் اِنَّا سَنُلۡقِیۡ عَلَیۡکَ قَوۡلًا ثَقِیۡلًا அதாவது நிச்சயமாக நாம் உம்மீது ஒரு வசனத்தை இறக்குவோம். அது மிகவும் சுமைமிக்கதாகும் என்று வந்துள்ளது. **(73:6)** *ஸகீல்* என்பதன் பொருள் இதுவேயாகும். ஆனால் ஷய்த்தான் ஏற்படுத்துகின்ற எண்ணங்களும் மனதில் இடப்படும் விஷயங்களும் அவ்வாறு இருக்காது. மனதில் எழும் விஷயமும், ஷய்த்தானும் ஒன்றே ஆகும். மனதில் வரும் விஷயங்களும், ஷய்த்தான் இடும் விஷயங்களும் ஒன்று தான். மனிதனுடன் இரு ஆற்றல்கள் எப்போதும் இருந்து வருகின்றன. அதில் ஒன்று மலக்கு ஆகும். மற்றொன்று ஷய்த்தானாகும். அவனது கால்களில் இரண்டு கயிறுகள் கட்டப்பட்டுள்ளன. மலக்கு நன்மையில் விருப்பத்தை ஏற்படுத்துகின்றார். அதற்காக உதவுகின்றார். அதைப் பற்றி திருக்குர்ஆனில் اَیَّدَهُمۡ بِرُوۡحٍ مِّنۡهُ அதாவது நமது வசனங்களை அனுப்பி நாம் அவர்களுக்கு உதவி செய்தோம் என்று வருகிறது. **(58:23)** அவ்வாறே ஷய்த்தான் தீமையின் பக்கம் விருப்பத்தை ஏற்படுத்துகின்றான். அதைப்பற்றி திருக்குர்ஆனில் யவஸ்விசு என்று வருகிறது. அதாவது ஷய்த்தான் உள்ளங்களில் சலனங்களை ஏற்படுத்துகின்றான். இந்த இரண்டையும் நம்மால் மறுக்க முடியாது. இருளும், ஒளியும் ஒன்றோடொன்று இணைந்து எப்போதும் இருந்து வரும். ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பது ஒரு பொருள் இல்லை என்பதை நிரூபிக்க முடியாது. அதாவது ஒரு விஷயத்தைப் பற்றி அறிவு இல்லையென்றால் பிறகு அந்த விஷயமே இல்லை என்பதை நிரூபிக்க முடியாது.

அன்னார் கூறினார்கள்: இவற்றைத் தவிர ஆயிரக்கணக்கான அதிசயங்கள் இருக்கின்றன. அல்லாஹ்வின் இந்த பிரபஞ்சம் ஒரு வியக்கத்தக்க விஷயமாகும். இதைத் தவிரவும் ஆயிரக்கணக்கான வியக்கத்தக்க விஷயங்கள் உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான். قُلۡ اَعُوۡذُ بِرَبِّ النَّاسِ என்ற சூராவில் ஷய்த்தான் ஏற்படுத்துகின்ற சந்தேகங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த நாட்களில் மக்களிடையே அவர்களது உள்ளங்களில் அவன் இந்த விஷயத்தை இடுகின்றான். குறிப்பாக இந்த நாட்களில் நவீன காலம் என்று கூறப்படும் இக்கால கட்டத்தில் அல்லாஹ்வை மனிதன் மறந்து கொண்டிருக்கின்றான். அந்த ஷய்த்தான்தான் உள்ளங்களில் சந்தேகத்தை இடுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: அவன் ஏற்படுத்துகின்ற மிகப்பெரிய சந்தேகம் இதுவாகும். அதாவது இறைவனின் ரப் என்ற பண்பு தொடர்பாக அவன் பல தவறான விஷயங்களை உள்ளத்தில் இடுகின்றான். உதாரணமாக பணக்கார மக்களிடம் அதிகமாக பொருளும் செல்வமும் இருப்பதைப் பார்த்து இவர்கள்தான் எங்களை வளர்க்கக் கூடியவர்கள் எங்களுக்கு எல்லாமே இவர்கள்தான் என்று மனிதன் கூறி விடுகின்றான்.

இந்த விஷயத்தை விளக்கிக் கூறியவாறு ஷய்த்தான் எவ்வாறு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றான்? இந்த சந்தேகத்திலிருந்து நாம் எவ்வாறு தப்பிக்க முடியும்? அதாவது பணக்கார மக்கள்தான் நமது தேவைகளை நிறைவேற்ற முடியும். அல்லது அல்லாஹ்வைத் தவிர வேறு எவராவது ஒருவன் மூலமாக தான் நமது தேவைகள் நிறைவடையும் என்பதிலிருந்து நாம் எவ்வாறு விலகி விட வேண்டும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். உண்மையான *ரப்புன்னாஸ்* ஆக அதாவது மக்களின் இறைவனாக இருப்பவனிடம் அடைக்கலம் தேடுவது தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்.

எனவேதான் அல்லாஹ் நான் உண்மையான மக்களின் இறைவனிடம் அவனது அடைக்கலத்தின் கீழ் வருகின்றேன் என்று துஆ செய்யும்படி கூறுகின்றான். பிறகு உலகிலுள்ள அரசர்களையும், ஆட்சியாளர்களையும் பற்றி அவர்கள் எல்லா அதிகாரங்களையும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்று மனிதன் கூற ஆரம்பித்து விடுகின்றான். இதற்கெதிரில் இறைவன் *மலிக்கின்னாஸ்* அதாவது மக்களின் எஜமானன் என்று கூறுகின்றான்.

مَالِکِ النَّاسِ மக்களின் இறைவனாக அல்லாஹ்வே இருக்கின்றான். பிறகு மக்கள் சந்தேகம் கொள்வதன் காரணமாக இந்த விளைவு ஏற்படுகின்றது. அதாவது இறைவனின் படைப்பினங்களை இறைவனுக்கு சமமாக அவர்கள் ஏற்றுக் கொள்ள முற்படுகின்றனர். அவர்களுக்கு அஞ்சுகின்றனர். அவர்களிடம் நம்பிக்கை வைக்கின்றனர். இதன் காரணமாகவே இறைவன் اِلٰہِ النَّاسِ அதாவது மக்களின் வணக்கத்திற்குரிய இறைவன் என்று அவன் தன்னைப் பற்றி கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வே ஆவான். ஆக, இந்த மூன்று சந்தேகங்களை அகற்றுவதற்காகவும் மூன்று அடைக்கலங்கள் கூறப்பட்டுள்ளன. அவை சூரா அன்னாஸில் விலக்கிக் கூறப்பட்டுள்ளது. இந்த சந்தேகங்களை ஏற்படுத்துபவனே *ஹன்னாஸ்* ஆக இருக்கின்றான். அதாவது அவன் ஷய்த்தான் ஆவான். அவனது பெயர் தவ்ராத்தில் எபிரேய மொழியில் இந்தர் நகாஷ் என்று வந்துள்ளது. அவன் ஹவ்வாவிற்கு அருகில் வந்தான். அவன் மறைந்திருந்து தாக்குபவன் ஆவான். இந்த அதிகாரத்தில் இதைப் பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து தஜ்ஜால் கூட எவரையும் வற்புறுத்த மாட்டான் என்பது தெரிய வருகின்றது. மாறாக, மறைந்திருந்து அவன் தாக்குதல் நடத்துவான். அதனால் எவருக்கும் அது பற்றி தெரிந்திருக்காது.

இன்றைய உலகத்தின் பொலிவு இன்றைய நாட்களில் புதிது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவை அல்லது இன்றைய கல்வி ஆகியவற்றை சாக்குப் போக்காக கூறி அல்லாஹ்விடமிருந்து தூரமாக விலகிச் சென்று விடுதல், மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விடுதல் ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டப்படுகின்றது. இதில் அரசாங்கங்களும் அடங்கும். பெரும் பெரும் அமைப்புகளும் அடங்கும். அதாவது மனித உரிமைகள் என்ற பெயரில் சில விஷயங்கள் கூறப்படுகின்றன. இதைப் பாருங்கள். இந்த விஷயங்களை பேண வேண்டும் என்று மார்க்கம் உங்களிடம் கூறுகின்றது. ஆனால் மனிதனின் உரிமைகள் எதிர்பார்ப்பது என்னவென்றால் அம்மனிதனுக்கு முழுமையான சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதாகும். ஆக, இந்த விஷயங்கள் மெது மெதுவாக உள்ளத்தில் இடப்படுகின்றது. இந்த விஷயங்களை ஷய்த்தானே செய்கின்றான். இவற்றில் அரசாங்கங்களும் அடங்கும். மனிதர்களின் உரிமைகள் என்ற பெயரில் அல்லது பெண்களின் உரிமைகள் என்ற பெயரில், பெண்களின் பெயரில் அல்லது நான் ஏற்கனவே கூறியது போன்று மனிதனின் உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் உள்ளன. இவர்கள் அனைவருமே இவற்றில் அடங்குவர். இவர்கள் மார்க்கத்திலிருந்து மக்களை விலக்கி தொலைவில் கொண்டு செல்ல முயற்சி செய்கின்றனர். எனவே ஒவ்வொருவரும் ஒவ்வோர் அஹ்மதியும் இதைப் புரிய வேண்டும். ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரும் இதைப் புரிய வேண்டும். அதாவது இங்கு ஷய்த்தானின் தாக்குதல் நம்மீது நடக்க இருக்கின்றது. இந்த தஜ்ஜாலிய ஆற்றல்கள் நம்மீது தாக்குதல் நடத்துகின்றன.

பிறகு அன்னார் கூறினார்கள்: ஷய்த்தான் சுயமே ஹவ்வாவிற்கு அருகில் சென்றான் என்பது தவறாகும். மாறாக, எவ்வாறு அவன் இப்போது மறைந்து வருகின்றானோ அவ்வாறே அப்போதும் அவன் மறைந்திருந்தவாறே அங்கு சென்றிருந்தான். எனவே ஹவ்வாவிடம் சென்றது எந்தவொரு நபரும் அல்ல. மாறாக, இவ்வாறே அவர்கள் சந்தேகத்தை ஏற்படுத்தினர்.

அன்னார் கூறினார்கள்: ஏதாவதொரு மனிதரிடத்தில் அவன் தனது எண்ணத்தை நிரப்பி விடுகின்றான். மேலும் அவர் அவனுக்கு பகரமாக அங்கு இருப்பவராக ஆகி விடுகின்றார். மார்க்கத்தின் எதிரிகளாக இருக்கின்ற அத்தகையவர்களின் உள்ளத்தில் ஷய்த்தான் இந்த விஷயத்தை இட்டு விட்டான். ஆதம் இருந்து வந்த அந்த சுவர்க்கமும் கூட இந்த பூமியில் தான் இருந்திருக்கின்றது. அது வானத்தில் இருக்கவில்லை. ஒரு தீயவன் அவரது உள்ளத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தினான். திருக்குர்ஆனின் முதல் அதிகாரத்திலேயே அல்லாஹ் வலியுறுத்தியவாறு *மக்ளூபி அலைஹிம்* (அல்லாஹ்வின் கோபம் இறங்கியவர்கள்) என்றும் *ழால்லீன்* (வழிகேட்டில் சென்றவர்கள்) ஆகியோரில் ஒருவராக நாம் ஆகிவிடக்கூடாது என வலியுறுத்திக் கூறியுள்ளான். அதாவது முஸ்லிம்களே! நீங்கள் யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் ஒழுக்கங்களை கடைபிடிக்க வேண்டாம் என்று இறைவன் கூறுகின்றான். இதிலும் கூட ஒரு முன்னறிவிப்பு வெளிப்படுகின்றது. அதாவது சில முஸ்லிம்கள் அவ்வாறு செய்வர். அதாவது ஒரு காலம் வரும். அப்போது இவர்களில் சிலர் யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் பண்புகளை மேற்கொண்டு நடப்பர். எந்த கட்டளைக்கு எதிராக செயல்படக்கூடிய சில மக்கள் இருப்பார்களோ கட்டளையும் அந்த விஷயங்கள் தொடர்பாகவே எப்போதும் கொடுக்கப்படுகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 244-245, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிரிதொரு சந்தர்ப்பத்தில் மார்க்கத்திற்கு எல்லா நிலையிலும் உலகத்தை விட முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பாருங்கள்! இரு வகையான மக்கள் உள்ளனர். முதல் வகையைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு உலகத் தொழில்களிலும், வியாபாரங்களிலும் ஈடுபடுகின்றனர். ஷய்த்தானின் அவர்களின் தலைகளில் சவாரி செய்கின்றான். வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டிருக்கிறது என்பது எனது கருத்தன்று. சஹாபாக்கள் வியாபாரமும் செய்தனர். ஆனால் அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இஸ்லாம் தொடர்பாக உறுதித் தன்மையால் அவர்களது உள்ளங்களை நிறைத்து விட்ட உண்மையான அறிவை அவர்கள் பெற்றுக் கொண்டனர். இதன் காரணமாகவே எந்தவொரு களத்திலும் ஷய்த்தானின் தாக்குதலின் காரணமாக அவர்கள் தடுமாறவில்லை. எந்தவொரு விஷயமும் உண்மையை வெளிப்படுத்திக் கூறுவதிலிருந்தும் அவர்களை தடுக்க முடியவில்லை. இதிலிருந்தும் நான் கூற வந்த கருத்து இது மட்டுமே ஆகும். அதாவது எவர்கள் உலகின் அடியார்களாகவும், அதன் அடிமையாகவும் ஆகிவிடுகின்றார்களோ அவர்கள் ஒரு வகையில் உலகை வணங்குபவராக ஆகி விடுகின்றனர். அத்தகைய மக்கள் மீது ஷய்த்தான் தனது ஆதிக்கத்தை செலுத்துகின்றான். அவர்களை தனது பிடியின் கீழ் கொண்டு வந்து விடுகின்றான்.

இரண்டாவது வகையான மக்கள் மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக கவலைப்படுபவர்களாக இருக்கின்றனர். இந்த ஒரு பிரிவினர் ஹிஸ்புல்லாஹ் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஷய்த்தான் மற்றும் அவனது படையின் மீது வெற்றி பெறுகின்றனர். பொருள் வியாபாரம் மூலமாகவே அதிகரிக்கின்றது. இதன் காரணமாக இறைவனும் கூட மார்க்கத்தை வேண்டுவதையும், மார்க்கம் முன்னேற வேண்டும் என்ற விருப்பத்தையும் ஒரு வியாபாரமாகவே குறிப்பிடுகின்றான். உலக செல்வங்கள் உலகத்திலேயே இருந்து விடுகின்றன. ஆனால் இறைவன் குறிப்பிடுகின்ற இந்த செல்வமும், இந்த வியாபாரமும் எதிர்கால வாழ்க்கையிலும் பயனளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. இதைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான். هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ அதாவது வேதனை நிறைந்த தண்டனையிலிருந்து உங்களை காப்பாற்றக்கூடிய ஒரு வியாபாரத்தை பற்றி நான் கூறட்டுமா? என்று அல்லாஹ் கேட்கின்றான். **(61:11)**

அன்னார் கூறுகின்றார்கள். மிகச் சிறந்த வியாபாரம் மார்க்கத்தின் வியாபாரமாகும். அது வேதனை நிறைந்த தண்டனையிலிருந்து நமக்கு இரட்சிப்பை வழங்குகின்றது. எனவே நானும் உங்களிடம் இறைவன் கூறியுள்ள இதே சொற்களில் இதையே உங்களிடம் கேட்கின்றேன். هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ **(61:11)**

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 193-194, 1985 ஆம் ஆண்டு மதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களிடம் இந்த கேள்வியை கேட்டுள்ளார்கள். எனவே நாம் இத்தகையதொரு வியாபாரத்தை செய்ய வேண்டும். இந்த வழிகளில் செல்ல முயற்சி செய்ய வேண்டும். இதன் பக்கமே காலத்தின் இமாமாகிய அல்லாஹ்வின் தூதர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்கள் நம்மை அழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதன் மூலமாக ஷய்த்தானின் அடிச்சுவட்டை பின்பற்றிச் செல்வதிலிருந்து நாம் தப்பிக்கலாம். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்றவாறு வேதனை நிறைந்த தண்டனையிலிருந்து தப்பித்து விடலாம்.

மறைவான பாவங்களிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒருவர் துன்பங்களில் சிக்கியுள்ளார் என்றால் இறுதியில் தவறுகள் அடியாருடையதாகவே இருக்கின்றது. இந்த துன்பங்களில் சிக்கிய பிறகு அல்லாஹ்வின் தரப்பிலிருந்துதான் இந்த துன்பங்கள் வந்தன என்று கூறுவது தவறாகும். மாறாக, தவறு அடியார்களுடையதாகும். இறைவனுடைய தவறு ஆகாது. வெளிப்படையாக பார்க்கும்போது பலரும் மிகவும் நல்லவர்களாக தெரிகின்றனர். இவர் மீது ஏன் துன்பங்கள் வந்தன? அல்லது ஏதாவதொரு நன்மையை பெறுவதிலிருந்தும் ஏன் இவர் விலகி இருக்கின்றார்? என மனிதன் வியப்படைகின்றான். ஆனால் உண்மையில் அவரது மறைவான பாவங்கள் இருந்தன. அவைதான் அவரது நிலையை இதுவரை கொண்டு வந்திருக்கின்றன. அல்லாஹ் மிகவும் அதிகமாக மன்னிக்கின்றான். கண்டும் காணாமல் விட்டு விடுகின்றான். இதன் காரணமாக மனிதன் செய்துள்ள மறைவான பாவங்கள் பற்றி தெரியாமல் போய் விடுகின்றது. ஆனால் மறைவான பாவங்கள் உண்மையில் அந்த வெளிப்படையான பாவங்களை விட மிகவும் மோசமானதாக இருக்கின்றன. பாவங்களின் நிலையும் கூட நோய்களைப் போன்றதே ஆகும். அதாவது பெரும் பெரும் நோய்களில் ஒவ்வொரு நபரும் வெளிப்படையாக தென்படுகின்ற நோய்களை பார்த்து விடுகின்றனர். ஆனால் சில மறைவான நோய்களும் உள்ளன. அவற்றைப் பற்றி சில நேரங்களில் நோயாளிக்கு கூட தெரிவதில்லை. என்னை இந்த அபாயம் பற்றிக் கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி அவருக்கே தெரிவதில்லை. அவ்வாறே எலும்புருக்கி நோய் உள்ளது. துவக்கத்தில் அதைப் பற்றி மருத்துவருக்கு கூட தெரிய முடியாது. எதுவரை என்றால் நோய் அபாயகரமானதாக ஆகிவிடுகிறது. சில நேரங்களில் இறுதிக் கட்டத்தில் தான்

இது பற்றி தெரிய வருகின்றது. புற்றுநோயாளிகளும் சில நேரங்களில் இவ்வாறுதான் காணப்படுகின்றனர். வெளிப்படையாகப் பார்க்கும் போது நல்ல ஆரோக்கியமுள்ள மனிதராக அவர்கள் தெரிகின்றனர். ஒரு நொடியில்தான் புற்றுநோய் இருப்பது தெரிய வருகின்றது. அப்போது அவர் எந்நிலையை அடைந்திருக்கின்றார் என்றால் அந்நிலையில் அவருக்கு எந்த சிகிச்சையும் செய்ய முடியாது. அந்த நோய் பரவி இருக்கும். ஒரு மாதத்திற்குள் அது மனிதனை அழித்து விடும்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எவ்வாறு நோய் பற்றி தெரிய முடியாமல் இருக்கின்றதோ அவ்வாறே மனிதனுக்குள்ளே இருக்கின்ற பாவங்கள் படிப்படியாக அவனை அழிவின் பக்கம் கொண்டு செல்கின்றது. இறைவன் தனது அருளால் கருணை காட்ட வேண்டும். திருக்குர்ஆனில் قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا அதாவது எவர் தம்மை தூய்மைபடுத்தினாரோ அவர் இரட்சிப்பைப் பெற்று விட்டார் என்று வந்துள்ளது. **(91:10)** ஆனால், நஃப்ஸ் தூய்மையடைவதும் கூட ஒரு மரணமேயாகும். எல்லா விதமான தீய ஒழுக்கங்களையும் விட்டு விடாத வரையில் எங்கிருந்து நஃப்ஸ் தூய்மையடையப் போகின்றது? ஷய்த்தான் நம்மை கொண்டு செல்கின்ற வீணான, மோசமான தீய ஒழுக்கங்களை நாம் கைவிடாத வரையில் நாம் எவ்வாறு தூய்மை அடைய முடியும்? இறைவன் வெறுக்கின்ற ஒவ்வொரு விஷயத்திற்கும் *முன்கர்* என்று கூறப்படுகின்றது. எனவே, எல்லா தீய ஒழுக்கங்களையும் கைவிடாத வரையில் எங்கிருந்து நஃப்ஸ் தூய்மையடைவதை நாம் பெற்றுக் கொள்ள முடியும்? ஒவ்வொரு நபரிடத்திலும் ஏதாவதொரு வகையில் தீமையின் தன்மை இருக்கின்றது. அதுவே அவனது ஷய்த்தான் ஆகும். அவனை கொலை செய்யாமல் பணி நடைபெற முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 280-281, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இதற்கு முன்னர் நான் கூறியது போன்றே நாம் எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் இருப்பது அவசியமாதாகும். எனவே, நீங்கள் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமானதாகும். ஷய்த்தானை அழிப்பதற்காக நாம் என்ன செய்ய முடியும்?

இது தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறை தூதர்கள் இறைவனின் தோற்றமாகத் திகழ்கின்றனர். அவர்கள் இறைவனை காட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். பிறகு உண்மையான முஸ்லிம் அந்தத் தூதர்களின் தோற்றமாகத் திகழ வேண்டும். கண்ணியமிக்க நபித்தோழர்கள் இந்த இரகசியத்தை நன்கு புரிந்திருந்தனர். ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதில் தங்களை இழந்த நிலையில், தங்களை மாய்த்துக் கொண்ட நிலையில் அவர்களிடம் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. எவர்கள் அவர்களைக் கண்டாலும் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பில் திளைத்திருப்பதையே கண்டனர். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவதற்கும் முயற்சிகள் செய்வதில் அவர்கள் மூழ்கியிருந்தனர்.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். இந்தக் காலகட்டத்திலும் கூட அதுபோன்ற கட்டுப்படுதல், தன்னை இறைவனுக்காக மாய்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களிடம் ஏற்பட்ட அதே நிலை உருவானால்தான் எனது சீடர்களில் ஒருவராக இருக்கின்றீர்கள் என்ற உங்களது வாதம் உண்மையான வாதமாகவும், பெருத்தமான வாதமாகவும் இருக்கும். இந்த விஷயத்தை நன்றாக உங்களது மூளையில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். எதுவரை இந்த நிலை ஏற்படாதோ, எதுவரை அல்லாஹ் உங்களுக்குள் பிரவேசிக்க மாட்டானோ, எதுவரை இறைவனின் அடையாளங்கள் உங்களிடம் வெளிப்படுவதில்லையோ அதுவரை ஷய்த்தானிய ஆட்சியின் செயலும், தலையீடும் இருக்கத்தான் செய்யும். (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 168-169, 1985 ஆம் ஆண்டு மதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நாம் கலப்பற்ற மனத்தூய்மையுடன் அல்லாஹ்விற்காக ஆகி விட முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அவ்வாறு செய்வானாக! நாம் எல்லா விதமான வெட்கக்கேடான செயல்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் தவிர்ந்திருப்பவர்–களாகவும், எல்லா வகையான கர்வத்திலிருந்தும் விலகி இருப்பவர்களாகவும் இருக்குமாறு அல்லாஹ் செய்வானாக! உங்களது நஃப்ஸை தூய்மைப்படுத்த முயற்சி செய்து கொண்டே இருங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகி விடுங்கள். எப்போதும் நமது பார்வை இறைவன் மீதே இருக்க வேண்டும். அவனே நமது *ரப்* ஆக இருக்க வேண்டும். அவனது *மாலிக்* (எஜமானன்) என்ற பண்பு எப்போதும் நமது உள்ளத்தில் இடம் பிடித்திருக்க வேண்டும். அவனே நமது வணக்கத்திற்குரியவன். அவனை எப்போதும் அழைப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதிலிருந்தும் நாம் தவிர்ந்திருக்க வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

அனுப்பப்பட்டிருப்பது பயனற்றதாக ஆகி விடும்.☆ அவர்கள் இல்லாமலும் பணி நடக்க முடியும். நபிமார்களின் பெரும் தேவை எதுவும் இல்லை என்றாகி விடும். இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்று கூறுவது போதுமானதாகும் என்பது உண்மையாக இருந்தால் பிறகு இதுவும் கூட இணை வைத்தலின் ஒரு வகையாக இருக்கும். அதாவது லாயிலாஹ இல்லல்லாஹு என்பதுடன் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பது கட்டாயமாக சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த எண்ணத்தை உடைய மக்கள் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறுவதை ஷிர்க்காக கருதுகின்றனர். இறைவனது பெயருடன் வேறு எந்த பெயரும் சேர்க்கப்படாமல் இருப்பதில்தான் முழுமையான ஏகத்துவம் இருக்கின்றது என்று அவர்கள் எண்ணுகின்றனர். அவர்களது பார்வையில் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேறுவது இரட்சிப்பை பெறுவதற்கு தடையாக இருக்காது. உதாரணமாக, ஒரே நாளில் எல்லா முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை மறுத்து விட்டு வழிதவறி போய்விட்ட தத்துவவாதிகளை போன்று ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதை மட்டும் போதுமானதாக கருதியவாறு திருக்குர்ஆனையும் ரஸூல் (ஸல்) அவர்களையும் பின்பற்றுவதிலிருந்து தங்களை தன்னிறைவு பெற்றவர்களாக எண்ணியவாறு அவற்றை பொய்ப்படுத்தி விட்டால் பிறகு அவர்களின் பார்வையில் இந்த எல்லா மக்களும் முர்தத்துகளாக ஆன பிறகும் கூட இரட்சிப்பை பெற்றுவிடுவர். சந்தேகமின்றி சுவர்க்கத்தில் நுழைந்து விடுவர். சிறிதளவு அறிவுள்ளவருக்கும் கூட இந்த விஷயம் மறைவானதாக இல்லை. அதாவது சஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் காலத்திலிருந்து நமது இந்த காலம் வரையிலுள்ள எல்லா இஸ்லாமிய பிரிவுகளும் இவ்விஷயத்தில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். அதாவது இஸ்லாத்தின் உண்மை இதுவாகும். எவ்வாறு ஒரு நபர் இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையாக யாரும் இல்லை என்றும் கருதுகின்றாரோ, மேலும் அவனது இருப்பின் மீதும் ஏகத்துவத்தின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவ்வாறே அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது ஈமான் கொள்வதும் அவசியமானதாகும். மேலும் திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தின் மீதும் அவர் ஈமான் கொள்ள வேண்டும். இந்த ஒரு விஷயம் மூளையில் பதியப்பட்டிருக்கின்றது. இதில் உறுதியான கொள்கையுடையவர்களாக இருந்ததன் காரணமாக சஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் தங்களது உயிரை இதற்காக அர்ப்பணித்து விட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நிராகரிப்பவர்களின் கைகளால் கைது செய்யப்பட்ட பல உண்மை முஸ்லிம்களிடம் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மறுத்துவிட்டால் நீங்கள் எங்களது கைகளால் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று மீண்டும் மீண்டும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அவர்கள் அதை மறுக்கவில்லை. மேலும் அதே வழியில் அவர்கள் தமது உயிரை அர்ப்பனித்தனர். இந்த விஷயங்கள் இஸ்லாத்தின் சம்பவங்களின் எந்த அளவு புகழ் பெற்றவையாக இருக்கின்றன என்றால் இஸ்லாமிய வரலாறு தொடர்பாக குறைவாக தெரிந்திருக்கின்ற ஒரு நபர் கூட நாம் கூறுவதை மறுக்க மாட்டார்.

☆ எந்த மக்கள் நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களைப் பொய்ப்படுத்துபவர்களாகவும் அவர்களது பகைவர்களாகவும் இருக்கின்றனரோ அவர்கள் தாங்கள் எண்ணிக்கொண்டிருக்கின்ற ஏகத்துவத்தினால் மட்டும் இரட்சிப்பை பெற்று விடுவார் என்ற இந்த விஷயம் உண்மையாக இருந்தால் பிறகு இந்த நிராகரிப்பவர்களுக்கு கியாமத்தில் ஏதாவது தண்டனை கிடைப்பதற்கு பகரமாக சுயமே இந்த நபிமார்கள் ஒரு வகையான தண்டனைக்கு ஆளாகி விடுவர். அவர்கள் தமது கடுமையான பகைவர்களும் தம்மை பொய்ப்படுத்தியவர்களும் இழிவுபடுத்தியவர்களும் சுவர்க்கத்தின் அரியணைகளில் அமர்ந்திருப்பதை காண்பர். தங்களை போன்றே எல்லா வகையான அருள்களும் அவர்களுக்கும் கிடைத்திருப்பதை அவர்கள் காண்பர். அந்த சமயத்திலும் கூட அம்மக்கள் எள்ளி நகையாடிவாறு நபிமார்களிடம் உங்களை பொய்ப்படுத்தியதாலும் இழிவுப்படுத்தியதாலும் எங்களுக்கு என்ன சீர்குலைவு ஏற்பட்டது? என்று கேட்கலாம். அப்போது சுவர்க்கத்தில் இருப்பது கூட நபிமார்களுக்கு கசப்பானதாக இருக்கும்.

(ஹகீகதுல் வஹி, ரூஹானி கஸாயின், தொகுதி 22, பக்கம் 111-114)

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Vol. 1 | Thursday 14 APRIL 2016 | Issue No. 6

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பு - ஒரு மகத்தான விண்ணின் அடையாளமாகும். அதன் பின்னணி, மகத்துவம் மற்றும் முக்கியத்துவம்

- இஹ்ஸானுல்லாஹ் தானிஷ் - ஜமாஅத்தின் முரப்பி

லேக்ராம் தனது நாவன்மை மற்றும் பிறரைத் தாக்கிப் பேசுவதில் முழு இந்தியாவிலும் புகழ்பெற்று விளங்க ஆரம்பித்தார். பிறகு, மெல்ல மெல்ல இந்துக்கள் லேக்ராமை தங்களது பிரதிநிதியாகவே ஆக்கி விட்டனர். பண்டிட் லேக்ராம் பகிரங்கமாக என்னைப் பற்றிய எந்த முன்னறிவிப்பை வேண்டுமானாலும் வெளியிடலாம். நான் அதற்கான அனுமதியைத் தருகின்றேன் என்று கூறியிருந்தார். இந்து சமுதாயம் அவருக்கு வழங்கியிருந்த புதிய அந்தஸ்து மேலும் லேக்ராமின் எல்லை மீறிய பரிகாசம் ஆகியவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவனத்தை லேக்ராமின் பக்கம் திருப்பியது. அப்போது இறைவனிடம் அவர்கள் இதற்கான தீர்ப்பை வேண்டினார்கள். அப்போது அவர்களுக்கு இந்த இல்ஹாம் வந்தது.

عِجْلٌ جَسَدٌ لَّهُ خُوَارٌ
لَهُ نَصَبٌ وَّعَذَابٌ

அதாவது, இது ஓர் உயிரற்ற கன்றுக்குட்டி மட்டுமேயாகும். அதற்குள்ளேயிருந்து ஒரு வெறுக்கத்தக்க ஓசை வருகின்றது. அதற்கு அதன் தரக்குறைவான நடத்தை, தீய சொற்களைக் கூறியது ஆகியவற்றிற்குப் பகரமாக தண்டனையும் துக்கமும் விதிக்கப்பட்டுள்ளது. அது கண்டிப்பாக அதற்கு கிடைத்தே தீரும். *(20 பிப்ரவரி 1893 -ல் வெளியிடப்பட்ட பிரசுரம் தப்லீக் ரிஸாலத் தொகுதி 3, ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 250)*

மேலும், இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று அவர்கள் இதற்கு யக்ஸி அம்ருஹு ஃபீ சித்தி அதாவது லேக்ராமின் விவகாரம் 6 -க்குள் (அதாவது 6 வருடங்களுக்குள்) முடிவுக்கு வந்து விடும் என்று விளக்கம் அளித்தார்கள். *(இஸ்திஃப்தா ரூஹானி கஸாயின் தொகுதி 12, பக்கம் 125 அடிக்குறிப்பு)*

பிறகு 1893 -ஆம் ஆண்டு ஏப்ரல் 2 -ஆம் தேதியன்று அதாவது 14 ரமலான் 1310 ஹிஜ்ரி அன்று காலை நேரத்தில் அவர்களுக்கு முகத்திலிருந்து இரத்தம் சொட்டுகின்ற நிலையில் ஒரு வலிமையுள்ள கொடூரமான தோற்றத்தை உடைய ஒரு நபர் லேக்ராமின் அழிவிற்காக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கஷ்ஃப் காட்சியின் மூலம் தெரிவிக்கப் -பட்டது. *(பரகாத்துத் துஆ. ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 33)*

பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூலான கராமத்துஸ் ஸாதிகீன் -ல் 1893 -ஆம் ஆண்டு இவ்வாறு எழுதியிருந்தார்கள்:

وَبَشَّرَنِیْ رَبِّیْ وَقَالَ مُبَشِّرًا
سَتَعْرِفُ یَوْمَ الْعِیْدِ وَالْعِیْدُ اَقْرَبُ

அதாவது எனக்கு லேக்ராமின் மரணம் தொடர்பாக இறைவன் நற்செய்தி வழங்கி இருந்தான். மேலும், விரைவில் நீர் அந்தப் பெருநாளை அடையாளங்கண்டு கொள்வீர். அசல் பெருநாளும் கூட இந்தப் பெருநாளுக்கு அருகிலேயே இருக்கும்.

ஆனால், லேக்ராம் ஹுஸூர் (அலை) அவர்களின் இந்த முன்னறிவிப்புகளைக் கவனம் செலுத்துவதற்கு தகுதியற்றவையாகக் கருதினார். எனவே, அவர் கர்வத்திலும் தீங்கிழைப்பதிலும் மேலும் முன்னேறினார். தான், கடந்த காலங்களில் செய்த முன்னறிவிப்புகளின் முடிவைப் பார்த்த பிறகும் கூட அவருக்கு வெட்கம் வரவில்லை. இறுதியில் தற்பெருமையிலும் பகைமையிலும் காழ்ப்புணர்ச்சியிலும் எல்லை மீறி நடந்து கொண்ட இந்த எதிரி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது முன்னறிவிப்புகளில் கூறப்பட்டிருந்த எல்லா விபரங்களும் நிறைவேறும் வகையில் 1897 -ஆம் ஆண்டு மார்ச் 6 -ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு அடையாளம் தெரியாத ஒரு நபரால் லாஹூரில் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் நடந்த நாள் நோன்புப் பெருநாளுக்கு மறுநாளாக இருந்தது.

ஆனால், இந்த முன்னறிவிப்பிலிருந்து படிப்பினையைப் பெறுவதற்குப் பகரமாக இந்துக்களும் குறிப்பாக ஆரியர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் இவரை கொலை செய்து விட்டார்கள் என்று பெரும் கூச்சலிட்டனர். மேலும், இந்த பத்திரிகைகளில் இந்தக் கொலை சம்பவம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சூழ்ச்சியால் நடந்ததாக எழுதப்பட்டிருந்தது. அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டனர். ஆனால், இறைவனின் விதிக்கு முன்னால் மனிதனின் சக்தி நிற்க முடியுமா?

இந்தக் கூச்சல் எழுந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 'லேக்ராமை பற்றிய ஆரியர்களின் எண்ணங்கள்' என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் அவர்கள் ஆரியர்களை மீண்டும் இன்னொரு விண்ணின் தீர்ப்பின் பக்கம் அழைத்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இப்போது கூட சந்தேகம் கொள்கின்ற ஒருவரது சந்தேகம் அகலவில்லையென்றால், மேலும் இந்துக்களின் பத்திரிகைகளில் கூறியிருப்பது போன்று அவர் என்னை இந்தக் கொலை தொடர்பான சூழ்ச்சியில் பங்கு பெற்றவனாகக் கருதுகின்றாரென்றால், நான் ஒரு நல்ல ஆலோசனையைக் கூறுகின்றேன். அதன் மூலம் இந்த விஷயத்திற்கான தீர்வு ஏற்பட்டு விடும். அது இதுவாகும். அதாவது, அத்தகைய நபர் என் முன்னால் சத்தியம் செய்து கூற வேண்டும். அவர் கூற வேண்டிய சொற்கள் இவையாகும். இந்த நபர் (அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) கொலை தொடர்பான சூழ்ச்சியில் பங்கு பெற்றுள்ளார் அல்லது அவருக்கு தெரிந்துதான் இந்தக் கொலை சம்பவம் நடந்தது என்பதை நிச்சயமாக நான் அறிவேன். இது உண்மை இல்லையென்றால் வல்லமைமிக்க இறைவா! ஒரு வருடத்திற்குள் மிகவும் பயங்கரமாக இருக்கின்ற தண்டனையை என் மீது இறக்குவாயாக! ஆனால், அந்த தண்டனை எந்த மனித கைகளாலும் தரப்படக் கூடாது. மனித திட்டங்களுக்கு அதில் பங்கு இருப்பதாக எவரும் கற்பனை செய்து கூட பார்க்கக் கூடாது. இதற்குப் பிறகு இவ்வாறு சத்தியம் செய்தவர் ஒரு வருடம் வரை எனது தீய துஆவிலிருந்து தப்பி விடுவார் என்றால் நான் குற்றவாளியாவேன். கொலை செய்கின்ற ஒருவனுக்கு வழங்கப்படும் அதே தண்டனைக்கு தகுதியுடையவராக ஆகி விடுவேன். இப்போது தைரியமுள்ள வீரமிக்க ஆரியர் எவராவது இருந்தால் அவர் இதற்காக முன் வந்து இதன் மூலம் முழு உலகையும் சந்தேகத்திலிருந்து விடுவிக்க இந்த வழிமுறையை கடைபிடிக்கலாம். *(15 மார்ச் 1897 -ல் வெளியிடப்பட்ட பிரசுரம்)* இந்த சவாலை கங்காபிஷன் என்பவரை தவிர வேறு எந்தவோர் இந்துவும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், கங்காபிஷனும் தன் தரப்பிலிருந்து சில நிபந்தனைகளை வைத்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அந்த நிபத்தனைகளை ஏற்றுக் கொண்டார்கள். எனது எல்லா வகையான வீணான நிபந்தனைகள் கூட ஏற்றுக்கொள்ளப் -படுகின்றது. நான் தப்பிப்பதற்கான எந்த வழியும் விட்டு வைக்கப்படவில்லை என்பதைப் பார்த்த அவர் இந்தப் போட்டியை விட்டு விலகி ஓடி தனது வாழ்வை காப்பாற்றிக் கொண்டார். *(ஹயாத்தே தய்யிபா பக்கம் 167-171)*

ஒருபுறம் பண்டிட் லேக்ராமின் மரணமும், மறுபுறம் கங்காபிஷன் இழிவான முறையில் தப்பி ஓடியது ஆகிய இறை கோபத்தின் அடையாளங்கள் வெளிப்பட்டன. மறுபுறம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் மகத்துவத்தின் அடையாளமாக இருந்த அந்த வாக்களிக்கப்பட்ட மகனான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது ஸாஹிப் அவர்கள் முன்னறிவிப்பிற்கேற்ப விரைவாக முன்னேற்றம் பெற்று உலகின் மூலைகளிலெல்லாம் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைக்கான முத்திரையைப் பதித்து விட்டார்கள்.

வாக்களிக்கப்பட்ட மகன் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களே ஆவார்கள் என்ற உறுதியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஜமாஅத்திலுள்ள சான்றோர்களும் நிலைபெற்றிருந்தனர். சுயமே ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களுக்கும் இதைப் பற்றிய ஞானம் இருந்தது. ஆனால், அவ்வாறிருந்தும் கூட அன்னார் தனது எஜமானனிடமிருந்து இது பற்றிய செய்தி கிடைக்காத வரை தாமே வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்று வாதம் செய்வதிலிருந்து தவிர்ந்திருந்தார்கள்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad